

# வருடாந்தக் கணக்கு 2014




## சுற்றுலா அபிவிருத்தி நிதியம்

# சுற்றுலா அபிவிருத்தி நிதியம்
# வருடாந்தக் கணக்கு - 2014

Invest in Sri Lanka

இலங்கை சுற்றுலா
அபிவிருத்தி அதிகார சபை

**கௌரவ ஜோன் அமரதுங்க அவர்கள் பா.உ.**

**சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய விவகார அமைச்சர்**
**கௌரவ அமைச்சர் அவர்களே,**

**சுற்றுலா அபிவிருத்தி நிதியம்**

2005 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க சுற்றுலா சட்டத்தின் 23 (1) பிரிவின்படி சுற்றுலா அபிவிருத்தி நிதியம் உருவாக்கப்பட்டதோடு, இதன் நிதியை சுற்றுலாத் துறையின் அபிவிருத்திக்கும் முன்னேற்றத்திற்கும் பயன் படுத்துதல் வேண்டும். இதற்கான நிதியை சேகரிப்பதும் வினியோகிப்பதும் 2003 ஆம் 25 ஆம் இலக்க நீதிச்சட்டம் மற்றும் 2005 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க சுற்றுலா சட்டத்தின் படி தீர்மானிக்கப்படும்.

2005 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க சுற்றுலா சட்டத்தின் 23 (2அ) பிரிவின்படி கப்பலேறும் வரி (நுஅடியசமயவழைெ வயஒ) வருமானத்தில் மூன்றில் ஒரு பங்கை சிவில் விமான சேவை அதிகார சபையால், இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபைக்கு செலுத்தப்படுகின்றது. அத்துடன் சுற்றுலாத் துறையுடன் தொடர்புடைய நிறுவனங்களிடமிருந்து காலாண்டு அடிப்படையில் சுற்றுலா வரியாக மேற்படி நிதியத்திற்கு பணம் கிடைக்கின்றது.

2014 ஜனவரி தொடக்கம் டிசம்பர் வரையான காலப்பகுதியில் சுற்றுலா அபிவிருத்தி நிதியத்தில் சேர்ந்த தொகை ரூ. 2837.43 மில்லியன் ஆகும். 2013 ஆம் வருடத்தில் இந்நிதியத்திற்குச் சேர்ந்த தொகை ரூ. 2625.14 மில்லியனாகும்.

இவ்வறிக்கையில் 2014 ஆம் ஆண்டிற்கான சுற்றுலா அபிவிருத்தி நிதியத்திற்கான நிதி சேகரித்தல் மற்றும் பங்கிடல் தொடர்பான விபரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. நன்றி.

**இப்படிக்கு,**

**(ஒப்பம்)**

**பீ. எம். விதானகே**

**தவிசாளர்**
**இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை**

# உள்ளடக்கம்


| | பக்க இலக்கம் |
|---|---|
| நிதி நிலைமைகள் தொடர்பான வெளிப்பாடுகள் | 01 |
| நிதி செயற்சாதனைகள் தொடர்பான வெளிப்பாடுகள் | 02 |
| நிதிப் பாய்ச்சல் கூற்று | 03 |
| கணக்குகளுக்குரிய குறிப்புக்கள் | 04-07 |

**சுற்றுலா அபிவிருத்தி நிதியம்**
**நிதி நிலைமைகள் தொடர்பான வெளிப்பாடுகள்**
**2014 டிசம்பர் 31 ஆம் திகதியன்று**

| | குறிப்பு | 2014 | 2013 |
|---|---|---|---|
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | ரூபா | ரூபா |
| நிதி மற்றும் நிதிக்குக் சமமானவைகள் | | 251,099,525.02 | 822,889,099.72 |
| கிடைக்க வேண்டிய நிதி | 8 | 673,329,739.00 | 633,886,904.04 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **924,429,264.02** | **1,456,776,003.76** |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| செலுத்த வேண்டிய நிதி வகைகள் | 9 | 3,380,858.23 | 3,890,830.99 |
| இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை | | 128,946,776.81 | 203,403,924.19 |
| இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம் | | 644,733,884.05 | 1,017,019,620.94 |
| இலங்கை சுற்றுலா ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம் | | 110,525,808.69 | 174,346,220.73 |
| இலங்கை இணக்கப்பாட்டுப் பணியகம் | | 36,841,936.23 | 58,115,406.91 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | **924,429,264.02** | **1,456,776,003.76** |

பக்க இலக்கம் 4 - 7 வரையான கணக்குக் கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் நிதி வெளிப்பாடுகளின் அத்தியாவசியப் பிரிவினைக் காண்பிக்கின்றது. இந்நிதி வெளிப்பாடுகளைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பிப்பதற்கான பொறுப்பு பணிப்பாளர் சபைக்குரியதாகும். நிதி வெளிப்பாடுகள் பணிப்பாளர் சபை சார்பில் இந் நிதிவெளிப்பாடுகளுக்காக ஒப்பமிடப்பட்டுள்ளது.

மல்ராஜ் பி. கிரியெல்ல
பணிப்பாளர் நாயகம்
இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை

பி.என். திசாநாயக்க
பணிப்பாளர் / நிதி முகாமையாளர்
இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை

பி.எம். விதான
தலைவர்
இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை

**சுற்றுலா அபிவிருத்தி நிதியம்**
**நிதிச் செயற்சாதனை தொடர்பான வெளிப்பாடுகள்**
**2014 டிசம்பர் 31 ஆம் திகதியன்று**

| | குறிப்பு | 2014<br>ரூபா | 2013<br>ரூபா |
|---|---|---|---|
| **வருமானம்** | | | |
| வரி | 3 | 2,785,332,979.95 | 2,619,040,948.38 |
| ஏனைய வருமானம் | 4 | 52,099,002.02 | 6,099,936.95 |
| **மொத்த வருமானம்** | | **2,837,431,981.97** | **2,625,140,885.33** |
| **செலவினம்** | | | |
| நிதியத்தின் நிர்வாகச் செலவினம் | 5 | 5,182,686.97 | 5,193,657.45 |
| நிதிச் செலவினம் | 6 | 26,922.96 | 5,943.00 |
| நிதியத்தின் விநியோகம் | 7 | 2,832,222,372.04 | 2,619,941,284.88 |
| **மொத்தச் செலவினம்** | | **2,837,431,981.97** | **2,625,140,885.33** |
| **மிகை (குறைவு) கால எல்லைக்காக** | | - | - |

**சுற்றுலா அபிவிருத்தி நிதியம்**
**நிதிப் பாய்ச்சல் கூற்று 2014 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்காக**

| | 2014 ரூபா | 2013 ரூபா |
|---|---|---|
| **செயற்பாடுகள் மீதான நிதிப் பாய்ச்சல்** | | |
| **கிடைப்பனவுகள்** | | |
| வரி விதிப்பு | 2,766,453,590.82 | 2,393,028,682.27 |
| ஏனைய கிடைப்பனவுகள் | 40,000,404.00 | 58,809.08 |
| **கொடுப்பனவுகள்** | | |
| கடன்படுனர் கொடுப்பனவு | (3,370,720,222.26) | (1,844,836,228.10) |
| ஏனைய கொடுப்பனவுகள் | (7,523,347.26) | (3,714,743.05) |
| **செயற்பாடுகள் மீதான தேறிய நிதிப் பாய்ச்சல்** | **(571,789,574.70)** | **544,536,520.20** |
| **முதலீட்டுச் செயற்பாடுகள் மீதான நிதிப் பாய்ச்சல்** | | |
| சொத்துக்கள் உபகரணங்கள் கொள்வனவு | - | - |
| சொத்துக்கள் ஆதனங்கள் உபகரண விற்பனை மூலம் பெற்ற நிதி | - | - |
| **செயற்பாடுகள் மூலம் பெறப்பட்ட தேறிய நிதிப்பாய்ச்சல்** | - | - |
| **நிதிச் செயற்பாடுகள் மூலம் பெற்ற நிதிப் பாய்ச்சல்** | | |
| கடன்படுனர் மூலம் பெற்ற நிதி | - | - |
| கடன் படுனர்கள் மீள செலுத்திய நிதி | - | - |
| விநியோகம் / அரசாங்கத்திற்குக் கிடைத்த இலாபம் | - | - |
| நிதி செயற்பாடுகள் மீதான தேறிய நிதிப் பாய்ச்சல் | - | - |
| **நிதி மற்றும் நிதிக்குச் சமமானவைகளின தேறிய அதிகரிப்பு (குறைவு)** | **(571,789,574.70)** | **544,536,520.20** |
| **கால எலலை ஆரம்பத்தில் நிதி மற்றும் நிதிக்குச் சமமானவைகள்** | **822,889,099.72** | **278,352,579.52** |
| **கால இறுதியில் நிதி மற்றும் நிதிக்குச் சமமானவைகள்** | **251,099,525.02** | **822,889,099.72** |

## கணக்குகளுக்குரிய குறிப்புக்கள்

### 1. சுற்றுலா அபிவிருத்தி நிதியம்

2005 ஆம் ஆண்டு இலக்கம் 38 கொண்ட சுற்றுலா சட்ட வாசக இலக்கம் 23 (1) இன் கீழ் சுற்றுலா அபிவிருத்தி நிதியம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இந்நிதியம் சுற்றுலாத் துறையின் முன்னேற்றம் மற்றும் அபிவிருத்திக்காகப் பயன்படுத்தப்படுகின்றது. சுற்றுலா அபிவிருத்தி நிதியத்திற்கு நிதி சேகரித்தல் மற்றும் வழங்கல் 2003 இலக்கம் 28 கொண்ட நிதிச் சட்டம் மற்றும் 2005 இலக்கம் 38 கொண்ட சுற்றுலா சட்டத்திற்கு அமைய மேற்கொள்ள வேண்டும்.

### 2. கணக்கீட்டுத் தேவைகள்

இந் நிதியக் கணக்கு தயாரிப்புக்கள் இலங்கை அரச தொழில் முயற்சி கணக்கீட்டுத் தரம் இலங்கை கணக்கீட்டுத் தரங்களுக்கமைய தயாரிக்கப் பட்டுள்ளது.

### 3. வரி – நிதியத்தின் வளம்

| | 2014<br>ரூபா | 2013<br>ரூபா |
|---|---|---|
| புறப்படுகை வரி | 1,779,766,146.71 | 1,604,887,048.67 |
| சுற்றுலா அபிவிருத்தி வரி | 1,005,566,833.24 | 1,014,153,899.71 |
| **மொத்தம்** | **2,785,332,979.95** | **2,619,040,948.38** |

### 3.1 புறப்படுகை வரி

சுற்றுலா சட்டத்தின் 23(2) (அ) வாசகத்தின் கீழ் புறப்படுகை வரியில் இருந்து 1/3 பகுதி இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபைக்கு சிவில் விமான சேவை அதிகார சபையினால் செலுத்தப்படுகின்றது.

| புறப்படுகைக் கட்டணம் (EL) | ரூபா. |
|---|---|
| 2014 ஜனவரி – ஒக்டோபர் வரை கிடைக்கப் பெற்ற நிதி | 1,494,348,292.15 |
| 2014 நவம்பர் - டிசம்பர் வரை கிடைக்கப் பெற்ற நிதி (மதிப்பீடு செய்யப்பட்ட) | 285,417,854.56 |
| **2014 ஆம் ஆண்டிற்காக மொத்தப் புறப்படுகைக் கட்டணம்** | **1,779,766,146.71** |

### 3.2. சுற்றுலா அபிவிருத்தி வரி

2003 இல. 28 கொண்ட நிதிச் சட்டத்தின் கீழ் சுற்றுலாத் துறையின் கீழுள்ள சகல நிறுவனங்களும் சுற்றுலா அபிவிருத்தி வரியினைச் செலுத்த வேண்டும் இச்சுற்றுலா அபிவிருத்தி நிதியத்தினைச் சேகரித்தல் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்டு சுற்றுலா அபிவிருத்தி நிதியத்தில் வைப்பிலிடப்படுகிறது. 2014 ஜனவரி தொடக்கம் டிசம்பர் வரையான கால எல்லைக்குள் சேகரிக்கப்பட்ட சுற்றுலா அபிவிருத்தி நிதியத்தின் வரி அளவு 648.8 மில்லியன் ரூபாவாகும். மேலும் 2014 ஒக்டோபர் - டிசம்பர் வரை புறப்படுகை வரியாக 357 மில்லியன் நிதி மதிப்பீடு செய்யப்பட்ட வருமானமாக கணக்குகளில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

| சுற்றுலா அபிவிருத்தி வரி | ரூபா. |
|---|---|
| | |
| 2014 ஜன - டிச வரையில் கிடைக்கப் பெற்ற மூலங்கள் | 648,801,438.52 |
| 2014 ஒக்டோபர் - டிசம்பர் வரையில் கிடைக்கப் பெற்ற மூலங்கள் (மதிப்பீடு செய்யப்பட்ட) | 357,000,000.00 |
| சுற்றுலா அபிவிருத்தி வரி மீள் கொடுப்பனவு | (234,605.28) |
| **2014 ஜனவரி - டிசம்பர் வரை சுற்றுலா அபிவிருத்தி வரி வருமானம்** | **1,005,566,833.24** |
| | |

#### 4. ஏனைய வருமானம்

ஏனைய வருமானமாக கணக்குகளில் பதியப்பட்டுள்ள பெறுமதி உள்ளடக்கி யிருப்பது நிதி சட்டத்திற்கமைய உரிய தினத்தில் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படாது பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களின் தமது கொடுப்பணவிற்கமைய அறவிடப்பட்ட வட்டி வருமானம் மற்றும் மறுக்கப்பட்ட காசோலைகளுக்காக பெறப்பட்ட மிகை கிடைப்பணவு அளவாகும்

| | ரூபா. |
|---|---|
| 2014 ஆம் ஆண்டுக்காக சேர்ந்த வட்டி | 12,045,561.02 |
| சபையின் தீர்மானத்திற்கமைய SLCEB இனால் செலவிடப்படாத நிதிக் கிடைப்பனவு | 40,000,000.00 |
| மறுக்கப்பட்ட காசோலைகளுக்கான மிகைக்கட்டண அறவீடு | 404.00 |
| அறவிடப்படாத நிதி | 53,037.00 |
| **மொத்தம்** | **52,099,002.02** |

#### 05. நிதியத்தின் நிர்வாகச் செலவினம்

| | **2014**<br>ரூபா | **2013**<br>ரூபா |
|---|---|---|
| முத்திரைக் கட்டணம் | 65,525.00 | 63,250.00 |
| நிருவாகச் செலவினம் | 5,088,061.98 | 5,101,267.45 |
| கணக்காய்வுக் கட்டணம் | 29,100.00 | 29,100.00 |
| தபால் கட்டணம் | - | 40.00 |
| **மொத்தம்** | **5,182,686.98** | **5,193,657.45** |

#### 6. நிதிச் செலவினம்

| | **2014**<br>ரூபா | **2013**<br>ரூபா |
|---|---|---|
| வங்கிக் கட்டணம் | 26,922.96 | 5,943.00 |
| **மொத்தம்** | **26,922.96** | **5,943.00** |

**7. நிதியத்தின் விநியோகங்கள்**

2005 இல. 38 கொண்ட சுற்றுலா சட்டத்தின் 24 (8) வாசகத்துக்கு அமைய நிதியத்தின் விநியோகங்கள் கீழ் குறிப்பிடப்பட்டவாறு ஆண்டுக்குள் மேற்கொள்ளப்பட்டன.

| | 2014<br>ரூபா | 2013<br>ரூபா |
|---|---|---|
| இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை | 396,511,132.09 | 366,791,779.88 |
| இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம் | 1,982,555,660.43 | 1,833,958,899.42 |
| இலங்கை சுற்றுலா ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம் | 339,866,684.64 | 314,392,954.19 |
| இலங்கை இணக்கப்பாட்டுப் பணியகம் | 113,288,894.88 | 104,797,651.40 |
| **மொத்தம்** | **2,832,222,372.04** | **2,619,941,284.88** |

**8. கிடைக்க வேண்டி நிதி வகைகள்**

| | 2014<br>ரூபா | 2013<br>ரூபா |
|---|---|---|
| கிடைக்க வேண்டிய புறப்படுகை வரி | 285,417,854.56 | 281,698,177.87 |
| கிடைக்க வேண்டிய சுற்றுலா அபிவிருத்தி வரி | 387,588,521.21 | 352,000,000.00 |
| கடன்படுநர் | 323,363.23 | 188,726.17 |
| **மொத்தம்** | **673,329,739.00** | **633,886,904.04** |

**9. செலுத்த வேண்டிய நிதி மூலங்கள்**

| | 2014<br>ரூபா | 2013<br>ரூபா |
|---|---|---|
| திரண்ட செலவினம் - நிர்வாகக் கட்டணம் | 3,022,527.95 | 3,761,568.99 |
| திரண்ட செலவினம் - கணக்காய்வுக் கட்டணம் | 58,200.00 | 29,100.00 |
| திரண்ட செலவினம் - முத்திரைக் கட்டணம் | 65,525.00 | 47,125.00 |
| ஏனைய நடைமுறைப் பொறுப்புக்கள் | 234,605.28 | 53,037.00 |
| **மொத்தம்** | **3,380,858.23** | **3,890,830.99** |

# විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
# கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
# AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. } ටීඑම්/කේ/ටීඩීඑෆ්/1/14/01 ඔබේ අංකය / உமது இல. / Your No. } දිනය / திகதி / Date } 2015 අගෝස්තු 6 දින

Sri Lanka Tourism Development Authority
11 AUG 2015
Director General's Secretariat

සභාපති,

ශ්‍රී ලංකා සංචාරක සංවර්ධන අධිකාරිය.

**ශ්‍රී ලංකා සංචාරක සංවර්ධන අරමුදලේ 2014 දෙසැම්බර් 31 දිනෙන් අවසන් වර්ෂය සඳහා වූ මූල්‍ය ප්‍රකාශන පිළිබඳව විගණකාධිපති වාර්තාව**

12 AUG 2015
FINANCE DIVISION

---

මාගේ සමාංක හා 2015 ජූනි 12 දිනැති ලිපියට යොමුවේ.

02. ඉහත සඳහන් ලිපිය සමඟ එවන ලද මාගේ වාර්තාවේ දෙමළ අනුවාදය මේ සමඟ එවා ඇත.

ඩබ්ලිව්.පී.සී.වික්‍රමරත්න

විගණකාධිපති (වැඩබලන)

පිටපත් : 1. ලේකම් - සංචාරක හා ක්‍රීඩා අමාත්‍යාංශය

2. ලේකම් - මුදල් අමාත්‍යාංශය

Sri Lanka Tourism Development Authority
CHAIRMAN'S OFFICE
1? AUG 2015
ශ්‍රී ලංකා සංචාරක සංවර්ධන අධිකාරිය
සභාපති කාර්යාලය

අංක 306/72, පොල්දුව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, - இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka

+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. } ரீஎம்/கே/ரீடீஎப்/1/14/01 ඔබේ අංකය / உமது இல. / Your No. } දිනය / திகதி / Date } 2015 யூன் 12

தலைவர்,

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை

**இலங்கை சுற்றுலா அபிவிருத்தி நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா அலுவல்கள் அதிகாரச்சட்டத்தின் 20 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதியத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, - இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 அபிப்பிராயம்**

நிதிக்கூற்றுக்களானவை சுற்றுலா அபிவிருத்தி நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்காமை**

மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் முன்னைய ஆண்டு காலப்பகுதியில் சீராக்கவேண்டிய ரூபா 30,588,521 தொகையான வருமான மிகை நிதிஏற்பாடு இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் படி ஒப்பிடப்பட்ட பெறுமதி சரிசெய்யப்பட்டு மீள வெளியிடப்பட்டிருக்கவில்லை.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

கீழே குறிப்பிடப்பட்ட இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| | **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு** | **இணங்காமை** |
|---|---|---|
| (அ) | 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா அலுவல்கள் அதிகாரச்சட்டத்தின் 24(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2003 இன் 25 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 11 ஆம் பிரிவு | சுற்றுலா வரி அறவிடும் அறிக்கை சுற்றுலா அபிவிருத்தி வரி (சு.அ.வ) அறவிடப்பட்டு 30 நாட்களுக்குள் பொதுத் திறைசேரியின் பிரதிச் செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். எவ்வாறெனினும், நிதியம் இந் நியதிகளுக்கு இணங்கியிருக்கவில்லை. |

(ஆ) 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா அலுவல்கள் அதிகாரச்சட்டம்

---

| | |
|---|---|
| I. 24(3) ஆம் பிரிவு | சுற்றுலா அபிவிருத்தி வரியை முகாமைத்துவப்படுத்துவதற்கும் நிர்வகிப் பதற்குமான விதிகள் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. |
| II. 24(8) ஆம் பிரிவு | சுற்றுலா அபிவிருத்தி நிதியத்தில் செலவு வைக்கப்பட்டுள்ள சகல நிதிகளும் உரிய நிறுவகங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு நிதியத்தின் செலவில் ரூபா 250,727,130 தொகையான பணம் காணப்பட்ட போதிலும் அப்பணத்தை பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2003 இன் 25 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 2(ஆ) ஆம் உப பிரிவு | இலங்கையிலிருந்து வெளிச்செல்லும் கப்பலில் இலங்கையிலிருந்து வெளியேறும் ஒவ்வொரு பயணிக்காகவும் வழங்கப்படும் ஒவ்வொரு கப்பற்சீட்டிலிருந்தும் வரி அறவிடப்பட்டு இதில் ஒரு பகுதி அதிகாரசபைக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு கப்பலில் பயணிக்கும் பயணிகளிடமிருந்து வரி அறவிடப்பட்டு அதிகாரசபைக்கு அனுப்பி வைக்கப்பட்டிராததுடன் கப்பலில் பயணிக்கும் பயணிகளிடமிருந்து அறவீடுகள் இல்லையென்பதற்கான உறுதிப்படுத்தல்களும் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) நிதிப் பிரமாண இல 169(2) | காசோலை தேறுவதற்கு முன் நிறுவனம் சேவை வழங்கிய 07 காசோலைகளுக்குரிய ரூபா 143,504 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க முடியாதிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது நிதியத்தின் செயற்பாடுகளால் ஈட்டிய வருமானம் ரூபா 2,837 மில்லியனானதுடன், இதனோடொத்த முன்னைய ஆண்டின் வருமானம் ரூபா 2,625 மில்லியன் ஆனமையால் வருமானத்தில் ரூபா 212 மில்லியன் தொகையான அதிகரிப்புக் காணப்பட்டது. குடியகல்வு வரி வருமானம் அதிகரித்தமை வருமான அதிகரிப்பிற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதிமீளாய்வு

மீளாய்வாண்டின் போது நிதியத்தின் வருமானம் ரூபா 2,837 மில்லியன் தொகையானதுடன் அது முன்னைய ஆண்டின் ரூபா 2,625 மில்லியன் தொகையுடன் ஒப்பிடுகையில் 8.07 சதவீத அதிகரிப்பைக் காண்பித்தது. இவ்வாறே முன்னைய ஆண்டின் நிதியத்தின் ஏனைய வருமானமாக சேகரிக்கப்பட்ட ரூபா 6 மில்லியன் தொகையுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது ரூபா 52 மில்லியன் தொகை சேகரிக்கப்பட்டிருந்தது. அதன் படி ஏனைய வருமானம் 766.6 சதவீத அதிகரிப்பைக் காண்பித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவத் திறமையீனங்கள்

#### 4.1.1 வருமானம் கைவிடப்பட்டமை

சுற்றுலா அலுவல்கள் அதிகாரச்சட்டத்தின் கீழ் அனுமதிப்பத்திரம் பெற்ற சகல நிறுவனங்களினாலும் 2003 இன் 25 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 11 ஆவது பிரிவில் காண்பிக்கப்பட்டுள்ளதன் படி சுற்றுலா அபிவிருத்தி வரித் தொகை செலுத்த வேண்டியிருந்ததுடன் அதற்காக 2003 திசெம்பர் 11 ஆம் திகதிய 1318/24 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் காட்டப்பட்ட மாதிரிப் பத்திரத்தின் படி சுற்றுலா அபிவிருத்தி வரித் தொகை அறவிடும் போது ஏனைய வருமானத்தின் கீழ் காண்பிக்கப்பட்ட வருமான மூலங்களில் சில கைவிடப்பட்டமையால் ரூபா 20,790,729 தொகையான வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

4.1.2 நிதிய முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதியத்தால் நிர்வாகச் செலவினமாக ரூபா 5,088,062 தொகை இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபைக்குச் செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், நிர்வாகச் செலவினக் கொடுப்பனவிற்கு 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா அலுவல்கள் அதிகாரச்சட்டத்தில் ஏற்பாடுகள் இருக்கவில்லை.

(ஆ) 2003 இன் 25 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், 2003 ஆகஸ்ட் 29 ஆந் திகதிய 1303/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் குடியகல்வு வரியாக விமானம் மூலம் வெளிச்செல்லும் சகலரிடமிருந்து 15 ஐக்கிய அமெரிக்க டொலர்களும், கப்பல் மூலம் வெளிச்செல்லும் சகலரிடமிருந்து 2.5 ஐக்கிய அமெரிக்க டொலர்களும் அறவிடப்பட வேண்டிய போதிலும், இக் குடியகல்வு வரியை அறவிடும் சிவில் விமானச் சேவைகள் சேவை பணிப்பாளர் நாயகத்தால் 2004 ஆம் ஆண்டு முதல் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ஒரு ஐக்கிய அமெரிக்க டொலருக்கு ரூபா 100 எனும் அந்நிய செலாவணிப் பரிமாற்ற அடிப்படையில் இவ் வரி அறவிடப்பட்டிருந்தமையால் 2012 ஆம் ஆண்டின் போதும் இதற்கு முன்னைய ஆண்டுகளிலும் நிதியத்திற்குக் கிடைக்க வேண்டிய குடியகல்வு வரி குறிப்பிடத்தக்களவு கிடைக்காது போயிற்று. அந்த அளவு 2012 ஆம் ஆண்டின் போது மாத்திரம் ரூபா 300 மில்லியன் எனப் புலனாகியது.

(இ) சுற்றுலா அபிவிருத்தி வரியை அறவிட வேண்டிய நிறுவனங்கள் தொடர்பான தரவு நிரல் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், ஒவ்வொரு ஆண்டிலும் அறவிடப்பட்ட வரி மற்றும் நிறுவனங்களது விற்பனை வருமானம் என்பன பதிவு செய்யப்படாமையால் நிலுவையான வரி தொடர்பாக ஒழுங்குமுறையொன்று இருக்கவில்லை.

(ஈ) 2003 திசெம்பர் 11 ஆம் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் 1 ஆம் 4 ஆம் பந்திகளிலுள்ள கட்டளைகளின் பிரகாரம், சுற்றுலா வரித் தொகை குறிப்பிட்ட காலப் பகுதியில் செலுத்தப்பட்டிராமை காரணமாக விதிக்கப்படும் தண்டப்பணம் போதாமையால் அதிகாரசபைக்கு நிதி ரீதியான நட்டம் ஏற்பட்டிருந்தது.

(உ) 2003 இன் 25 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 4(2) ஆம் பிரிவின் பிரகாரம் விமானக் கம்பனியால் குறித்த காலப்பகுதியின் போது வரி செலுத்தப்பட்டிராத சந்தர்ப்பங்களில் குறித்த தண்டப்பண வட்டியுடன் அப் பணம் அறவிடப்பட்டு அதிகாரசபைக்கு அனுப்பிவைக்கப்பட்டதா என்பதற்கான உறுதிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க அரசாங்க நிறுவனங்களின் நல்லாளுகை தொடர்பான சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காண்டு முடிவுற்று 60 நாட்களுக்குள் இறுதிக் கணக்குகள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2014 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 02 ஆம் திகதியே கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான தொகைகளுக்கிடையே 05 விடயங்கள் தொடர்பில் 6 சதவீதத்திலிருந்து 100 சதவீதம் வரை கருத்திற்கொள்ளப்பட வேண்டிய முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டமையைக் காண முடியாதிருந்தது.

6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு குறைபாடுகள் அவ்வப்போது பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) நிதிகளை பகிர்ந்தளித்தல்

(இ) சுற்றுலா அபிவிருத்தி வரிச் சேகரிப்பு

(ஈ) குடியகல்வு வரிச் சேகரிப்பு

(உ) அனுமதிப்பத்திரமுடைய நிறுவனங்களின் நிதி அறிக்கைகளின் மீளாய்வு

ஒப்பம்:- டபிள்யூ.பீ.சீ.விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்)

